வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 3865 /ஆ4/ 2023, நாள்.29.05.2024

----

பொருள் : தேர்வுகள் –பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டமை –வேலூர் மாவட்டம் – 30.05.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் லக்ஷ்மி கார்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் உள்ள கூட்ட அரங்கில் தலைமையாசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெறுதல் –சார்பு

----

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த பத்தாம் வகுப்பு,மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதை தொடர்ந்து, அனைத்து அரசு/நகரவை /ஆதிதிராவிடர் நல / நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான ஆய்வுக்கூட்டம் 30.05.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் வேலூர், லக்ஷ்மி கார்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து வகை அரசு/நகரவை/ஆதிதிராவிடர் நல/நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ள தெரிவிக்கப்படுகிறது .

மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து கூட்டம் நடைபெறும் நாளன்று ஒப்படைத்திட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : படிவம் 1,2A,2B,2C

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

- அரசு நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி/ஆதிதிராவிடர் நல/நகரவை/ தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம் .

நகல்

1. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் பள்ளிகள் ) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து அனுப்பிவைக்கப்படுகிறது.